**சார்பு நீதிமன்றம், மன்னார்குடி**
**அசல் வழக்கு எண்.105/2022**

2023 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 29 ஆம் நாள் செவ்வாய்கிழமை

வா.சா.1 இந்திய சாட்சி சட்டத்தின் கீழ் திரு.கே.சக்திவேல், எம்.ஏ., எல்.எல்.எம், சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிடப்பட்டு உறுதி கூறப்படுகிறது. சாட்சியிடம் சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | முத்தண்ணா நான்சி | க/பெ.: | சத்தியமூர்த்தி |
| கிராமம்: | கும்பகோணம் | தாலுக்கா: | கும்பகோணம் |
| மதம்: | இந்து | தொழில்: | |
| வயது: | 51 | முகவரி: | இலக்கம் 35/4 பி,<br>பேட்டை குட்டியான் தெரு |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of – 1873 on day of 29.08.2023

**<u>முதல் விசாரணை :–</u>**

நான் வழக்கின் வாதி ஆவேன். எனது தரப்பு சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள விவரங்கள் நான் சொன்னதுதான். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். என் தரப்பு சான்று ஆவணங்களாக கீழ்கண்ட ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகிறது. எனவே தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 15.02.2008 | வாதிக்கு பிரதிவாதி எழுதிக் கொடுத்த பதிவு செய்யப்படாத கிரய ஒப்பந்த பத்திரம் – அசல் |
| வா.சா.ஆ.2 | -- | நில உரிமை விபரம் – இணையதள நகல் |
| வா.சா.ஆ.3 | -- | வில்லங்க சான்றிதழ் – இணையதள நகல் |